**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**MCOP.No.54/2020- PW-1**

| | |
|---|---|
| Name | திரு.லோகநாதன் |
| Husband/Father Name | திரு.தாமோதரன் |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 02.09.2025.

**முதல் விசாரணை தொடர்ச்சி:–**

முதல் தகவல் அறிக்கை உண்மை நகல் **ம.சா.ஆ.1** ஆகும். MIOT International மருத்துவமனையின் டிஸ்சார்ஜ் சம்மரி அசல் **ம.சா.ஆ.2** ஆகும். வாலாஜா அரசு மருத்துவமனை விபத்து பதிவேடு நகல் **ம.சா.ஆ.3** ஆகும். வாலாஜா அரசு மருத்துமனை டிஸ்சார்ஜ் சம்மரி **ம.சா.ஆ.4** ஆகும். MIOT International மருத்துவமனையின் மருத்துவ செலவு பில்கள் அசல் (10–தாள்கள்) **ம.சா.ஆ.5** ஆகும். விபத்து ஏற்படுத்திய கேசவன் என்பரின் ஓட்டுநர் உரிம நகல் **ம.சா.ஆ.6** ஆகும். TN 73 L5402 பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தின் இன்சூரன்ஸ் பாலிசி நகல் **ம.சா.ஆ.7** ஆகும். TN 73 L5402 பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தின் பதிவு சான்றிதழ் நகல் **ம.சா.ஆ.8** ஆகும். என்னுடைய ஆதார் அடையாள அட்டை நகல் **ம.சா.ஆ.9** ஆகும். மனுப்படி உத்தரவாக வேண்டிக்கொள்கிறேன்.

**2–ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–**

கிழக்கு மேற்காக செல்லும் சென்னை–பெங்களூரு நெடுஞ்சாலையில் வடக்கு பக்கம் விபத்து நடந்தது என்றால் சரிதான். நான் பயணம் செய்த மோட்டார் சைக்கிளை ஓட்டியவர் பெயர் கேசவன். அந்த கேசவனின் சித்தப்பா 1–ம் எதிர்மனுதாரர் ராமலிங்கம் என்பவருக்கு அந்த மோட்டார் சைக்கிள் சொந்தமானது. சம்பவம் நடந்த போது இரவு சுமார் 9.10 மணி ஆகும். சம்பவம் நடந்த பிறகு கேசவன் தான் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த புகார் மனுவில் விபத்து சிலம்பு ஓட்டல் முன்பாக நடந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். சிலம்பு ஓட்டல் முன்பாக நாங்கள் மோட்டார் சைக்கிளை நிறுத்திய போது எங்களுக்கு பின்னால் வந்த டாடா இண்டிகா கார் எங்கள் மோட்டார் சைக்கிளின் பின்புறம் மோதியதாக முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது தவறாக சொல்லப்பட்டுள்ளது. எனக்கு விபத்தில் வலது காலில் காயம் ஏற்பட்டது. விபத்து சமயத்தில் நானும், கேசவனும் தலைகவசம் அணிந்திருக்கவில்லை என்றால்

கேசவன் தலைகவசம் அணிந்திருந்தார். நான் தலைகவசம் அணியவில்லை. நான் மோட்டார் சைக்கிளில் பின்னால் அமர்ந்து சென்ற போது அதிலிருந்த கைப்பிடியை பிடிக்காமல் சென்றேனா என்றால் கைப்பிடியை பிடித்திருந்தேன். கேசவன் திடீரென மோட்டார் சைக்கிளின் பிரேக்கை அழுத்தி நிறுத்தியதால் நான் கீழே விழுந்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. டாடா இண்டிகா காரை கண்டுப்பிடிக்க முயற்சித்தோமா என்றால் நான் கீழே விழுந்துவிட்டதால் என்னை காப்பாற்றும் பதற்றத்தில் கேசவன் இருந்ததால் டாடா காரை தேட முயற்சிக்கவில்லை. எனக்கு காலில் ஏற்பட்ட காயம் குணமடைந்துவிட்டது என்றால் தொடர் சிகிச்சை எடுத்துக்கொண்டிருக்கிறேன். நான் தொடர் சிகிச்சை எடுத்து வருவதை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னால் ஊன்றுகோல் இல்லாமல் நடக்க முடியும் என்றால் சரிதான். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் எனக்கு ரூ.5லட்சம் மருத்துவ செலவு ஏற்பட்டதாக நான் சொல்லியிருப்பது உண்மை தான். ம.சா.ஆ.5 மருத்துவ பில்களில் முதல் பில்லில் ரூ.2,20,541/– என உள்ளது என்றால் சரிதான். 2, 3–வது பில்களின் கூட்டுத்தொகையான ரூ.2,10,775/– என்பதை முதல் பில்லில் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 4–வது பில்லின் படி நான் செலுத்திய முன் பணம் ரூ.1,24,833/– என்றால் சரிதான். 5–வது பில்லின் படி நான் செலுத்திய முன் பணம் ரூ.50,000/– என்றால் சரிதான். 6–வது பில்லின் படி நான் செலுத்திய முன் பணம் ரூ.35,000/– என்றால் சரிதான். 7–வது பில்லின் படி நான் செலுத்திய பணம் ரூ.3,200/– என்றால் சரிதான். அந்த ரூ.3,200/–ஐ முதல் பில்லில் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 8–வது பில்லின் படி நான் செலுத்திய பணம் ரூ.128.50/– என்றால் சரிதான். 9–வது பில்லில் நான் பணம் எதுவும் செலுத்தியதாக இல்லை என்றால் சரிதான். 10–வது பில்லின் படி நான் செலுத்திய பணம் ரூ.518.79/– என்றால் சரிதான். 10–வது பில்லின் தொகை முதல் பில்லில் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 30.08.2019–வரை எனக்கு ஏற்பட்ட மருத்துவ செலவு என ரூ.2,20,541/– என்றால் சரிதான். அந்த ம.சா.ஆ.5 மருத்துவ பில்லிற்கான தொகையை நான் வேறு காப்பீடு நிறுவனத்தில் இது நாள் வரை பெறவில்லை. வருங்கால மருத்துவ செலவிற்காக நான் மனுவில் கேட்டிருக்கும் ரூ.1லட்சத்திற்கான மருத்துவ ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

சென்னை–பெங்களூரு நெடுஞ்சாலை வாகன போக்குவரத்து அதிகமுள்ள சாலை என்றால் சரிதான். ஒரு வாகனத்திற்கு பின்னால் மற்ற வாகனங்கள் வந்து கொண்டிருக்கும் என்பது எனக்கு தெரியும். நான் வழக்கறிஞர் தொழில் செய்து வருகிறேன். வருமான வரி செலுத்தவில்லை. என் வலது கால் முட்டியில் ஏற்பட்ட காயம் என்பது எங்களுக்கு பின்னால் வந்த டாடா இண்டிகா கார் உரசியதால் ஏற்பட்டுள்ளது என்றாலும், நான் மோட்டார் சைக்கிளிலிருந்து தவறி விழுந்ததால் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. நான் பின்னால் அமர்ந்து சென்ற மோட்டார் சைக்கிளை ஓட்டிய கேசவன்

சாலையின் ஓரமாக நிற்காமல் சாலையிலேயே நிறுத்தியதால் தான் விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சம்பவம் பற்றி நான் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியிருப்பது தவறு என்றால் சரியல்ல. நான் என் காயத்திற்கு கேட்டுள்ள இழப்பீடு தொகை அதிகமானது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:—** இல்லை

BALAKRISHNAN Digitally signed by BALAKRISHNAN DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District Judge,
Ranipet.